## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 பாதகமான அபிப்பிராயம்

இலங்கை தேசிய நீரியல் சீவராசிகள் வளர்ப்பு அபிவிருத்தி அதிகாரசபையின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானக் கூற்று, உரிமை மூலதன மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்புக்கள் மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினது பொழிப்புக்களை உள்ளடக்கிய 2019 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள், இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டம் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு அறிவிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காண்பிக்கப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் காண்பிக்கப்பட்டுள்ள விடயங்களின் முக்கியத்துவம் காரணமாக அதிகாரசபையின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் வெளிக்காட்டவில்லை என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 பாதக அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான முகாமைத்துவத்தினதும் ஆளுகைத் தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, அதிகாரசபை தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது அதிகாரசபையினைக் கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

அதிகாரசபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் அதிகாரசபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு கம்பனி அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்தும் நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி அதிகாரசபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு அதிகாரசபைக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை

காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் அதிகாரசபையின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

தேவையானவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- அதிகாரசபையின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- அதிகாரசபையின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் அதிகாரசபை இணங்கியிருந்ததா என்பதும்,

- அதிகாரசபை அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- அதிகாரசபையின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.5.1 நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மீதான உள்ளகக் கட்டுப்பாடுகள்

முகாமைத்துவத்தின் பொதுவான அல்லது குறித்துரைக்கப்பட்ட அங்கீகாரத்துடன் கொடுக்கல் வாங்கல்கள் மேற்கொள்ளப்படுகின்றன என்றும் பொருத்தமான அறிக்கையிடல் நியமங்களிற்கிணங்க நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்படுவதை அனுமதிப்பதற்கும் சொத்துக்களிற்கான கணக்களிப்பொறுப்பை பேணுவதற்கும் தேவையானவாறு கொடுக்கல் வாங்கல்கள் பதிவு செய்யப்படுகின்றன என்றும் முகாமைத்துவத்தின் பொதுவான அல்லது குறித்துரைக்கப்பட்ட அதிகாரத்தின் பிரகாரம் மாத்திரமே சொத்துக்களை அணுகுவதற்கு அனுமதிக்கப்படுகின்றது என்றும் பதிவு செய்யப்பட்ட சொத்துக்களிற்கான கணக்களிப்பொறுப்பு ஏற்கனவேயுள்ள சொத்துக்களுடன் நியாயமான கால இடைவெளிகளில் ஒப்பீடு செய்யப்படுகின்றன என்றும் ஏதாவது வேறுபாடுகள் தொடர்பாக பொருத்தமான நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என்றும் நியாயமான உறுதிப்பாட்டை வழங்குவதற்கு போதுமான உள்ளகக் கணக்கீட்டுக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை “திட்டமிட்டு பேணுதல்” அதிகாரசபையின் தேவைப்பாடாக உள்ளது.

### 1.5.2 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்கியிருக்காமை.

| தொடர்புடைய நியமம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 01 இன் 132 ஆம் பிரிவின் பிரகாரம் முக்கியத்துவம் வாய்ந்த கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்பு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், அதிகாரசபையின் ரூபா 199,793,706 கடன் விற்பனை வருமானத்தை இனங்காணும் கணக்கீட்டுக் கொள்கை வெளிப்படுத்தப் பட்டிருக்கவில்லை. | பெற்ற மற்றும் பெறவேண்டிய வருமானத்தைக் கருத்திற் கொண்டு நியாயமான பெறுமதியின் அடிப்படையில் வருமானம் அளவிடப்படுகின்றது. 2020 ஆம் ஆண்டில் இந்தக் கணக்கீட்டுக் கொள்கையினை வெளிப் படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப் படும். 2019 ஆம் ஆண்டின் நிதிக் கூற்றுக்களிற்கான 2.2 ஆம் இலக்க கணக்கீட்டுக் கொள்கையில் காண்பிக் கப்பட்டுள்ளவாறு அதிகாரசபையினால் அட்டுறு அடிப்படையில் கணக்குகள் தயாரிக்கப்படுவதுடன் அதற்கமைய கடன் விற்பனையும் காசு விற்பனையும் விற்பனையாக இனங்காணப்படுகின் றது. | இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமங்களிற்கு அமைவாக நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்படுதல் வேண்டும். |
| (ஆ) இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 07 இன் 47 ஆம் பிரிவின் படி ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் நியாயாப் பெறுமதியானது பொருண்மையாக மாற்றமடைகையில், 03 ஆண்டுகளிற்கு அல்லது 05 ஆண்டுகளிற்கு ஒருமுறை மீள விலைமதிப்பிட வேண்டிய போதிலும், அதிகாரசபை ஆரம்பிக்கப்பட்ட ஆண்டான 1998 இற்குப் பின்னர் அனைத்துச் சொத்துக்களிற்காகவும் மீள விலை மதித்தல் மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. | சொத்துக்களை மீள விலைமதிப்பிடுவதற்கான பணியினை விலை மதிப்புத் திணைக்களத்திற்கே அதிகாரசபை ஒப்படைத்தல் வேண்டும். இதற்கு முன்னர் அத்திணைக்களத்திற்கு பொறுப்பளிக்கப்பட்ட விலை மதிப்பீட்டு பணியினை அத்திணைக்களம் உரிய படி நிறைவேற்றியிருக்கவில்லை. அதிகாரசபையிடமுள்ள சொத்துக்களின் அளவின் அடிப்படையில் இப்பணி மிகவும் சிக்கலானதாக காணப்படு கின்ற போதிலும் இது தொடர்பில் நடவடிக்கை எடுப்பதற்கு கருத்திலெ டுக்கப்படும். | இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமங்களிற்கு அமைவாக சொத்துக்களின் நியாயப் பெறுமதியை காண் பிக்கும் விதத்தில் சொத்துக்களை மீள விலை மதிப்பிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) காசுப் பாய்ச்சல் கூற்றினைத் தயாரிக்கையில் முன்னைய ஆண்டுச் சீராக்கமான ரூபா 1,751,100 தொகையும் சொத்துக்களை கொள்வனவு செய்வத ற்காக முன்னைய ஆண்டில் செலவிடப்பட்டிருந்த ரூபா 507,649,300 தொகையும் முறையே செயற்பாட்டு மற்றும் முதலீட்டுச் நடவடிக்கைகளின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்தமையாலும், நிர்மாணங்களிற்காக மீளாய்வாண்டில் செல விடப்பட்டிருந்த ரூபா 222,871,670 தொகை காசு உட்பாய்ச்சலாக பிழையான விதத்தில் முதலீட்டு நடவடிக்கையின் கீழ் | எதிர்காலத்தில் காசுப் பாய்ச்சல் கூற்றைத் தயாரிக்கையில் இது தொடர்பில் கவனம் செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமங்களிற்கு அமைவாக நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்படுதல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| காண்பிக்கப் பட்டிருந்தமையாலும் அதிகாரசபைக்கு கிடைத்திருந்த ரூபா 82,498,182 மானி யம் நிதி நடவடிக்கைகளின் கீழ் காண்பிக்கப் படாதிருந்தமையாலும் அமைச்சிற்கு மீன்களை வழங்கியமைக்காக மானியமாக கிடைத்திருந்த ரூபா 21,661,135 தொகை இரண்டு தடவைகள் விற்பனைகள் மற்றும் நிதி நடவடிக்கைகளின் கீழ் தவறான முறையில் காண்பிக்கப்பட்டிருந்தமை யாலும் காசுப் பாய்ச்சல் கூற்றின் சரியான தன்மையினை கணக்காய்வில் ஏற்றுக்கொள்ள முடியாதுள்ளது. | | |
| (ஈ) இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமம் 08 இன் 97 ஆம் பந்தியின் பிரகாரம், அதிகாரசபைக்கு எதிராக இழப்பீட்டைக் கோரி 03 வழக்குகளும் தீர்வுக்கான 03 வழக்குகளும் என்ற வகையில் 06 வழக்குகள் தொடுக்கப் பட்டிருந்த போதிலும், அந்த வழக்குகள் காரணமாக ஏற்படத்தக்க கடப்பாடுகள் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப் பட்டிருக்கவில்லை. | முகாமைத்தும் கருத்துத் தெரிவித்தி ருக்கவில்லை. | இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நிய மம் 08 இன் பிரகாரம் நிகழத்தக்க பொறுப்புக் கள் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்படுதல் வேண்டும். |

### 1.5.3 கணக்கீட்டுன் குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) மீளாய்வாண்டில் 324 சந்தர்ப்பங் களில் வங்கிக்கு நேரடியாக செலவு வைக்கப்பட்டிருந்த ரூபா 3,766,745 தொகையான வங்கி வைப்புக்களை இனங்கண்டு கணக்ககளில் சீராக்கு வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக் கவில்லை. | வங்கி நேரடி வைப்புக்களை இனங் காண்பது ஓரளவு சிக்கலானதாக காணப் படுவதுடன், கடந்த காலங்களில் அவ்வா றான வங்கி நேரடி வைப்புக்களை இனங் கண்டு கணக்கீடு செய்வதில் அதிகார சபை பாரிய முன்னேற்றத்தைக் கண்டுள் ளது. 2019 திசெம்பர் 31 வரையிலுமான அனைத்து வங்கி நேரடி வைப்புக்களும் இனங்காணப்பட்டு பதிவுசெய்யப்பட்டுள் ளதுடன், இந்த ஆண்டின் சனவரி முதல் இதுவரையான சில நேரடி வைப்புக் களைத் தவிர ஏனைய அனைத்தும் ஒரு மாதத்திற்கு மேற்படாத விதத்தில் கணக்குகளில் பதிவு செய்யப்பட்டுள்ளன. இந்த நடைமுறையினை மேலும் முறைமைப்படுத்துவதற்காக Google Spread Sheet இனை பயன்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. | நேரடி வங்கி வைப்புக் களை இனங்காண்பதற் காக வழிமுறையொன்று தயாரித்து நடைமுறைப் படுத்தப்படுதல் வேண் டும். |

| | | |
|---|---|---|
| (ஆ) உயிரியல் சொத்துக்களை கணக்கீடு செய்யும் கணக்கீட்டுக் கொள்கை யொன்றை அறிமுகப்படுத்தி அதற்க மைய அதிகாரசபையின் மீன் குஞ்சுகளை இனப்பெருக்கம் செய் யும் நோக்கில் வைத்திருக்கப் பட்டுள்ள தாய் மீன்களின் இருப் பினை விலை மதிப்பீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக் கவில்லை. | உயிரியல் இருப்புக்கள் அவற்றின் விற்பனை விலையின் அடிப்படையில் விலை மதிப்பிடப்பட்டுள்ளன. | இலங்கை கணக்கீட்டு நியமம் 41 இன் பிரகாரம் மீன் இருப்பினை விலை மதிப்பிடுவதற்கு பொருத் தமான கணக்கீட்டுக் கொள்கையொன்றை அறிமுகப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) மீன்பிடி மற்றும் நீரியல் வளர்ப்பு நலனாளிகளிற்கு உட்கட்டமைப்பு வசதிகளை வழங்குவதற்காக அமைச்சின் நிதி ஏற்பாட்டின் கீழ் செலவிடப்பட்டிருந்த ரூபா 211,351,045 தொகையான அபிவிரு த்திச் செயற்திட்டச் செலவினம், அபிவிருத்திச் செயற்திட்டங்களின் கீழ் நிதிக்கூற்றுக்களில் காண்பிப் பதற்குப் பதிலாக ஏனைய கடன்கொடுத்தோரின் கீழ் காட்டப்பட் டிருந்தது. | ரூபா 183,691,999 பெறுமதியான Crab city செயற்திட்டத்திற்குரிய நிர்மாணத்திற் காகப் பயன்படுத்தப்பட்டிருந்த காணி குறித்த உரிமையாளரால் எமது அதிகாரசபைக்கு தற்காலிகமாக பொறுப்ப ளிக்கப்பட்டுள்ளதுடன், அதிகாரசபை யினால் அவர்களிற்குப் பொருத்தமான மாற்று இடமொன்று தயார்படுத்தி வழங்கப்படுகின்றது. ஆகையால், இந்த நிர்மாணப் பெறுமதி எமது நிதிக்கூற்றுக் களில் வெளிக்காட்டப்பட்டுள்ளதுடன் குறித்த நபர்களிற்கு பொறுப்பளிக்கப்பட வேண்டியிருப்பதன் காரணமாகவே அது நடைமுறைப் பொறுப்பின் கீழ் காண்பிக் கப்பட்டுள்ளது. ''இனிமை இறங்கு துறை'' செயற்திட்டத்தின் போது அந்தக் காணியின் உரித்து எமக்கு காணப்படாத போதிலும், நிர்மாணம் பூரணப்படுத்தப் பட்ட பின்னர் ஒப்பந்த காரரிடமிருந்து நிர்மாண வேலைகள் அதிகாரசபை யினால் கையேற்கப்பட்டமையால் நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டதுடன், உரிய நபர்களிற்கு கையளிக்கப்பட வேண்டியிருப்பதன் காரணமாகவே அது நடைமுறைப் பொறுப்பின் கீழ் காண்பிக்கப்பட்டுள்ளது. | அபிவிருத்தி நடவடிக் கைகளை மேற்கொள்வ தற்கு முன்னர் காணிக ளின் உரித்தினை கையேற்பதற்கு நடவடி க்கை எடுத்தல் வேண் டும். திறைசேரியின் நிதி யினை அபிவிருத்தி நடவ டிக்கைகளிற்கு பயன்படு த்துவதற்கு முன்னர் திட்டங்கள் தயாரிக்க ப்பட்டு சுற்றாடல் மற்றும் சாத்தியக்கூற்று அறிக் கைகளை பெற்றுக் கொள்தல் வேண்டும். |
| (ஈ) அதிகாரசபைக்கு உரித்துடையதும் தற்போது அதிகாரசபையின் செயற்பா டுகளிற்காக பயன்படுத்தி வரப்படுகின் றதுமான 18 காணித் துண்டுகளின் பெறுமதிகளை விலை மதிப்பிட்டு 2019 திசெம்பர் 31 இல் உள்ள வாறான நிதிக்கூற்றுக்களில் காண்பித் திருக்கவில்லை. இதன் காரணமாக காணிகளின் பெறுமதி நிதிக்கூற்றுக் களில் குறைத்துக் காண்பிக்கப்பட் டிருந்தது. | அதிகாரசபைக்குச் சொந்தமான அனைத் துக் காணிகளின் பெறுமதிகளையும் 2020 இற்கான நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கும் விதத்தில் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான காணிகளிற்கு மாத்திரம் விலை மதிப்பீட்டை மேற்கொள்வதற்கு தற்போது நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. தற்போது கஹந்தமோதர மற்றும் அஹுனுவெவ நிலையங்கள் விலை மதிப்பிற்காக அனப்பிவைக்கப்பட டுள்ளன. | அதிகாரசபைக்குச் சொந் தமான காணிகள் விலை மதிக்கப்பட்டு நிதிக்கூற்று க்களில் காண்பிக்கப் படுதல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| (உ) மீளாய்வாண்டில் மீன் வளர்ப்போருக்காக இலவசமாக பகிர்ந்தளிக்கப்பட்டிருந்த ரூபா 58 மில்லியன் பெறுமதியான இறால் குஞ்சுகளை ஏனைய செலவினமாக கணக்கீடு செய்வதற்குப் பதிலாக விற்பனையாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. இதன் காரணமாக மீளாய்வாண்டிற்கான இலாபம் மேற்குறித்த தொகையால் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது. | முகாமைத்துவத்தினால் கருத்துத் தெரிவிக்கப்பட்டிருக்கவில்லை. | இலவசமாக விநியோகிக்கப்பட்ட இருப்பின் கிரயத்தைக் கணிப்பிட்டு இருப்பிலிருந்து கழித்து விற்பனைக் கிரயமாக காண்பித்தல் வேண்டும். |
| (ஊ) ஒப்பந்தப் பதிவேட்டில் உள்ளடங்கியுள்ள 2019 ஆம் ஆண்டின் முடிவுறா வேலைகளிற்காக மீளாய்வாண்டின் இறுதியில் செலுத்த வேண்டியுள்ள ரூபா 94,821,266 பொறுப்புகள் பதிவுசெய்யப்பட்டு நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை. அதற்கமைய, மீளாய்வாண்டின் இறுதியிலுள்ளவாறான நடைமுறைப் பொறுப்புக்கள் அத்தொகையால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. | அதிகாரசபையினால் நிர்மாணங்கள் தொடர்பாக செலுத்தப்பட வேண்டியுள்ள பட்டியல்களை கணக்குகளில் பதிவு செய்யாதிருப்பதற்கான காரணம் எதிர்வரும் ஆண்டில் ஏற்பட ஏதுவான இரண்டு தடைவ பதியும் சிக்கலைத் தவிர்ப்பதற்காகும். அதாவது கொடுப்பனவுகளை மேற்கொள்கையில் உரிய செலவின விடயத்திற்கான செலவாக இனங்காணப்படுகின்றது. செலுத்த வேண்டியதாக கணக்கீடு செய்கையிலும் குறித்த செலவின விடயத்திற்கான செலவொன்றாகவே இனங்காணப்பட வேண்டியுள்ளது. இந்நிலையில் எதிர்வரும் காலத்தில் இதனை செலுத்துகையில் மீண்டும் குறித்த செலவின விடயத்திற்கு செலவொன்றாக தாக்கீடு செய்யப்பட வேண்டியேற்படுவதனால் ஒரே தொகை 02 தடவைகள் குறித்த செலவின விடயத்திற்கு செலவு வைக்கப்படுகின்றது. இருப்பினும், பௌதீக செயல் முன்னேற்றத்திற்காக இவ்வாறு செலுத்தப்படாதுள்ள பட்டியல்களையும் உள்ளடக்கி அறிவிக்கப்படுகின்றது. இது தொடர்பாக அதிகாரசபையின் கணக்கீட்டு நடைமுறையினை மேலும் ஆய்வுக்கு உட்படுத்த நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | நிதிக்கூற்றுக்கள் அட்டுறு அடிப்படையில் கணக்கீடு செய்யப்படுகின்றமையால் செலுத்த வேண்டியபட்டியல்கள் செலுத்த வேண்டியவையாக பதியப்படுதல் வேண்டும். |
| (எ) 1998 ஆம் ஆண்டு அதிகாரசபையினை ஸ்தாபிக்கையில் கையளிக்கப்பட்டிருந்த உடவலவையில் அமைந்துள்ள கட்டிடங்கள் உள்ளிட்ட இரண்டு காணிகளின் விலை மதிப்புப் பெறுமதியை அல்லது கையளிக்கையில் காணப்பட்ட ரூபா 89,630,000 பெறுமதியினை நிதிக்கூற்றுக்களில் காண்பித்திருக்கவில்லை. அவ்வாறே, 2007 ஆம் ஆண்டில் உரிமை | முகாமைத்துவத்தினால் கருத்துத் தெரிவிக்கப்பட்டிருக்கவில்லை. | அதிகாரசபையின் சொத்துக்களை உரியபடி இனங்கண்டு திருத்தமாக கணக்கீடு செய்யப்படுதல் வேண்டும். |

ஒப்படைக்கப்பட்டிருந்த மொனராகல நீரியல் சீவராசிகள் வளர்ப்புச் செயற்திட்ட அலுவலகம் அமைந்துள்ள காணி 2012 ஆம் ஆண்டில் ரூபா 9,700,000 இற்கு பெறுமதியிடப்பட்டிருந்த போதிலும், அந்தக் காணியினதும் கட்டிடங்களினதும் பெறுமதி கணக்குகளில் பதிவு செய்யப்பட்டிருக்கவில்லை.

### 1.5.4 கணக்காய்விற்காக ஆவணச் சான்றுகள் இல்லாமை.

| விடயம் | தொகை | சமர்ப்பிக்கப்படாத சான்று | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| | ரூபா | | | |
| (அ) கடன்பட்டோர் மீதி | 30,003,330 | மீதி உறுதிப்படுத்தல்கள் | முகாமைத்துவத்தினால் கருத்துத் தெரிவிக்கப்பட்டிருக்கவில்லை. | மீதி உறுதிப்படுத்தல்களை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) நீண்டகால நிதியங்களின் கீழ் கடன் பெறுதல் | 59,047,009 | உடன்படிக்கைகள் | முகாமைத்துவத்தினால் கருத்துத் தெரிவிக்கப்பட்டிருக்கவில்லை. | உடன்படிக்கைகள் மற்றும் விபரமான பட்டோலைகளை சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) திவிநெகும கடன் பெறுவனவுகள் | 3,707,500 | விபரமான பட்டோலைகள் | | |
| (ஈ) மீன் சொசேஜஸ் | 1,258,960 | விபரமான பட்டோலைகள் மற்றும் காலப்பகுப்பாய்வு | முகாமைத்துவத்தினால் கருத்துத் தெரிவிக்கப்பட்டிருக்கவில்லை. | நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டுள்ள விடயங்களை உறுதிப்படுத்தவதற்காக விபரமான பட்டோலைகள் மற்றும் காலப் பகுப்பாய்வுகளை சமர்ப்பித்தல் வேண்டும். |
| (உ) 13 கடன்கொடுநர் மீதிகள் | 3,884,459 | | | |
| (ஊ) நானாவித வைப்புக்கள் | 5,221,615 | | | |
| (எ) இனங்காணப்படாத மீதிகள் | 452,474 | | | |

### 1.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்களிற்கான தொடர்பு | இணக்கமின்மை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணங்கள் | | | |
| i) நிதிப் பிரமாணம் 371(இ) | முற்பணங்கள் அவை வழங்கப்பட்ட நோக்கம் நிறைவேறியவுடன் தீர்க் கப்பட வேண்டிய போதி லும், 28 சந்தர்ப்பங் களில் வழங்கப்பட்ட ரூபா 437,000 தொகை யான முற்பணங்கள் அவ்வாறு தீர்க்கப்படாது 14 முதல் 326 நாட்கள் வரையான கால தாமதத்தின் பின்னரே திர்க்கப்பட்டிருந்தன. | 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு தீர்க்கப்ப டாதிருந்த முற்பண மீதி களில் 2020 யூலை 14 ஆந் திகதியளவில் அற விடுவதற்கு நிலுவையாக வுள்ள தொகை ரூபா 96,640.03 மாத்திரமே யாகும். | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண் டும். |
| ii) நிதிப் பிரமாணம் 395 (இ) | வங்கிக் கணக்கு வைத்துள்ள அனைத்து நிறுவனங்களினாலும் ஒவ்வொரு மாத முடிவி லும் தமது கொடுக்கல் வாங்கல் நிலைமை தொடர்பில் தொடர்ந்து வரும் மாதத்தின் 15 ஆந் திகதிக்கு முன்னர் வங்கிக் கணக்கிணக்கத் தினை தயாரிக்க வேண் டிய போதிலும், ஒரு வங்கிக் கணக்கு தொட ர்பில் ஆகஸ்ட் முதல் திசெம்பர் வரை வங்கிக் கணக்கிணக்கக் கூற்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | வங்கிக் கணக்கிணக்கம் கணக்கு வைப்போரால் தயாரிக்கப்பட வேண்டு மென்பதுடன், கணக்கு வைப்போரின் பதவி திடீரென வெற்றிடமான மையால் ஆகஸ்ட் முதல் திசெம்பர் வரை வங்கிக் கணக்கிணக்கக் கூற்றை தயாரிக்க முடிந் திருக்கவில்லை. | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் வங்கிக் கணக் கிணக்கக் கூற்று தயாரி க்கப்பட வேண்டுமென் பதுடன் வங்கிக் கணக்கிணக் கத்தினை தயாரி ப்பதன் மூலம் சிறந்த நிதிக் கட்டுப்பாட்டை ஏற்படுத்த முடியும். |
| iii) நிதிப்பிரமாணம் **570** | அதிகாரசபையில் தீர்க் கப்படாது 05 முதல் 10 ஆண்டுகளைத் தாண்டி வைத்திருக்கப்பட்டுள்ள ரூபா**3,917,966** தொகை யான ஒப்பந்த பிடித்து வைத்தல் காசு மற்றும் ரூபா**8,088,637** தொகை | பிடித்து வைத்துள்ள காசு தொடர்பில் பொறியியல் பிரிவிலுள்ள ஆவணங்களுடன் பரிசோதித்து மீதிகளை தீர்ப்பதற்கு அல்லது நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை | நிதி பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண் டும். |

| | | | |
|---|---|---|---|
| | என்பன தொடர்பில் நிதி பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | எடுப்பதற்கு படிமுறைகள் மேற்கொள்ளப்படும். | |
| **(ஆ)** இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு தாபன விதிக்கோவையின் II ஆம் தொகுதியின் LVIII அத்தியாயத்தின் 29 ஆம் பிரிவு | கஹந்தமோதர நண்ணீர் இறால் இனப்பெருக்க நிலையத்தினை நிர்மாணிக்கையில் மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்த ரூபா **947,068** தொகை தொடர்பில் பொறுப்புவாய்ந்த உத்தியோகத்தர்களிற்கு எதிராக முறையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | முகாமைத்துவத்தினால் கருத்துத் தெரிவிக்கப்பட்டிருக்கவில்லை. | தாபன விதிக்கோவையின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். |
| **(இ) 2006** இன் அரசாங்க கொள்வனவு வழிகாட்டல்கள் கையேட்டின் **4**:2:1 ஆம் வழிகாட்டல் | கொள்வனவுத் திட்டத்திலுள்ள 27 விடயங்களை கொள்வனவு செய்வதற்காக ரூபா **243.95** மில்லியன் நிதி ஏற்பாடு செய்யப்பட்டிருந்த போதிலும், இதற் காக வரிசை அமைச்சுச் செயலாளரின் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்படாததுடன், விரிவான கொள்வனவுத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவுமில்லை. | கொள்வனவு வழிகாட்டல்கள் கையேட்டின் **4**:2:1 ஆம் வழிகாட்டலின் பிரகாரம் வரிசை அமைச் சுச் செயலாளரின் அங்கீகாரத்தை பெற்றுக்கொள்ளல், பாதீடு மற்றும் செயல்நடவடிக்கைத் திட்டத்திற்கான அங்கீகாரத்தைப் பெறுகையில் பெற்றுக் கொள்ளப்பட்டது. | கொள்வனவு வழிகாட்டல்கள் கையேட்டின் அறிவுறுத்தல்களின் படி கொள்வனவுத் திட்டத்தையும் செயல் நடவடிக்கைத் திட்டத்தையும் ஒரே நேரத்தில் தயாரித்து பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கையொப்பத்துடன் 2020 சனவரி 31 இற்கு முன் னர் தேசிய கொள்வனவு ஆணைக்குழுவிற்குச் சமர்ப்பித்தல் வேண்டும். |
| **(ஈ) 02/2017** ஆம் இலக்க 2017 திசெம்பர் 21 ஆந் திகதிய நிதி மற்றும் ஊடக அமைச்சின் சொத்துக்கள் முகாமைத்துவ சுற்றறிக்கை | மீன்பிடி மற்றும் நீரியல் வளங்கள் அமைச்சி னால் அதிகாரசபைக்கு வழங்கப்பட்டுள்ள 3 உழவு இயந்திரங்கள் மற்றும் 05 மோட்டார் சைக்கில்களின் பதிவு உரித்தினை அதிகார சபைக்கு கையேற்றிருக் கவில்லை. | பதிவு உரிமையின்றி பயன்படுத்தப்படுகின்ற வாகனங்களை பதிவு உரிமை கொண்டுள்ள நிறுவனங்களின் இணக்கப்பாட்டுடன் கையேற்பதற்காக அதிகாரசபையினால் 2019 மார்ச் 11 ஆந் திகதிய கடிதத்தின் மூலம் அமைச்சிற்கு கோரிக்கை விடுக்கப்பட்டது. அந்தக் கையேற்பு நடவடிக்கைகள் குறித்து நிறுவனத்துடன் ஒருங்கிணைந்து மேற்கொள்ளப்பட்டு வருகின்றன | சுற்றறிக்கையின் பிரகா ரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | என்பதனை தயவுடன் அறிவிக்கின்றேன். | |
| (உ) **01/2018** ஆம் இலக்க 2018 மார்ச் 19 ஆந் திகதிய நிதி மற்றும் ஊடக அமைச்சின் சொத்துக்கள் முகாமைத்துவ சுற்றறிக்கை | பயணத்தில் ஈடுபடுத்த முடியாதுள்ள அனைத்து வாகனங்களும் 2018 யூன் 30 ஆந் திகதிக்கு முன்னர் கைதவிர்க்கப் பட வேண்டிய போதி லும், அதிகாரசபையில் பயணத்தில் ஈடுபடுத்த முடியாத நிலையிலுள்ள 4 குழாம் வாகனங்களை கைதவிர்ப்பதற்குத் தேவையான நடவடிக் கைகள் எடுக்கப்பட்டிருக் கவில்லை. | குறித்த மோட்டார் சைக் கில்கள் செயற்திட்ட அலு வலகங்களில் வைத்திரு க்கப்பட்டுள்ளதுடன் அந்த மோட்டார் சைக்கில்க ளில் மேற்கொள்ளப்பட வேண்டிய சிறிய திருத் தங்களின் பின்னர் அவ ற்றை செயற்திட்ட உத்தி யோகத்தர்களிற்கு வழங் குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதுடன் எதிர்காலத்தில் புதிய மோட்டார் சைக்கில்கள் கொள்வனவு செய்யப் பட்ட பின்னர் இவற்றை கைதவிர்ப்பதற்கு நடவடி க்கை எடுக்கப்படும் என்பதனை தாழ்மையு டன் அறியத்தரகின்றேன். | சுற்றறிக்கையின் பிரகா ரம் நடவடிக்கை எடுத் தல் வேண்டும். |
| (உ) பீஈடீ **1/2015** ஆம் இலக்க 2015 மே 25 ஆந் திகதிய அரசாங்க முயற்சிகள் சுற்றறிக்கையின் 3.2 ஆம் பிரிவு | அங்கீகாரமின்றி எரிபொ ருள் எல்லையினை மீறி 2019 ஆம் ஆண்டில் செலவிடப்பட்டிருந்த ரூபா **276,511** தொகைக் குரிய எரிபொருள் பட்டியல்கள் மிள்நிரப்பப் பட்டிருந்தன. | எதிர்காலத்தில் இத்தவ றினை திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்ப டும் என்பதுடன், அதிகார சபையின் தலைவரின் அங்கீகரிக்கப்பட்ட மாதா ந்த எரிபொருள் எல்லை யான 150 லீற்றர்களை மிகைத்து ரூபா இருபத்தி ஐயாயிரம் (ரூபா 25,000) வரை எரிபொருள் செல வினை மீள்நிரப்புவதற் காக செயலாளருக்குரிய அதிகாரத்தினை அதிகார சபையின் பணிப்பாளர் சபைக்கு பெற்றுக்கொள் வதற்குத் தேவையான நடவடிக்கைகள் எதிர் காலத்தில் மேற்கொள்ள ப்படும். | சுற்றறிக்கையின் பிரகா ரம் நடவடிக்கை எடுத் தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஊ) DMA/01/2019 ஆம் இலக்க 2019 சனவரி 12 ஆந் திகதிய முகாமைத்துவ கணக்காய்வுச் சுற்றறிக்கை | **2019** இற்கான உள்ள கக் கணக்காய்வுத் திட்ட த்தினைத் தயாரித்து அதன் பிரதியினை முகாமைத்துவக் கணக் காய்வுத் திணைக்களத் திற்கு சமர்ப்பிக்க வேண்டிய போதிலும், அவ்வாறு செய்யப்பட் டிருக்கவில்லை. | முகாமைத்துவத்தினால் கருத்துத் தெரிவி க்கப்பட்டிருக்கவில்லை. | சுற்றறிக்கையின் பிரகா ரம் நடவடிக்கை எடுத் தல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

---------------------

### 2.1 நிதி விளைவுகள்

-------------------------------

மீளாய்வாண்டிற்கான செயற்பாட்டு விளைவுகள் ரூபா 55.4 மில்லியன் பற்றாக்குறையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான பற்றாக்குறை ரூபா 10.00 மில்லியன் ஆகும். அதற்கிணங்க நிதி விளைவுகளில் ரூபா 45.4 மில்லியன் பின்னடைவு அவதானிக்கப்பட்டது. மீளாய்வாண்டில் விற்பனைக் கிரயம் ரூபா 9.68 மில்லியனால் அதிகரித்திருந்தமை மற்றும் நிர்வாக மற்றும் விநியோகச் செலவினம் முறையே ரூபா 75.5 மில்லியன் மற்றும் ரூபா 44.8 மில்லியனால் அதிகரித்திருந்தமை பிரதான காரணங்களாக காணப்பட்டன.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

----------------------------

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மை

-----------------------------------------------------------

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) உடவலவ திலாபியா இனவிருத்தி நிலையத்திலுள்ள மீன் குளங்களின் பாதுகாப்பிற்காக காணியினைச் சுற்றி அமைக்கப்பட்டுள்ள வேலியினை திருத் தியமைப்பதற்காக மேலதிக வேலைக ளுடன் சேர்த்து ரூபா 4,521,452 தொகை செலவிடப்பட்டிருந்தது. மேலதிக வேலைகளிற்காக ரூபா 1,647,889 தொகை செலவிடப்பட்டிருந் தமை காரணமாக 550 மீற்றர் நீளமான வேலியினை திருத்தியமைப்பதற்காக மதிப்பீடு செய்யப்பட்டிருந்த நிதி ஏற்பாட்டு எல்லையினுள் வேலியின் 343.45 மீற்றர் மாத்திரமே நிர்மா ணிக்கப்பட்டிருந்தது. மீன் குளங்களை உள்ளடக்கும் விதத்தில் வேலி அமைக்கப்படாமையாலும் நிர்மாணிக் | உடவலவ திலாபியா இனவிருத்தி நிலையத்திலுள்ள மீன் குளங்க ளின் பாதுகாப்பிற்காக காணியி னைச் சுற்றி வேலியினை நிர்மாணிப்பதற்கான செயற்திட்டத் திற்கு பொறியியலாளர் மதிப்பீடு தயாரிக்கப்பட்டு ஏற்பாடுகளிற்கு அமைவாக ஒப்பந்தகாரர் தெரிவு செய்யப்பட்ட பின்னர் இக்காணிக்கு அயலிலுள்ள காணியின் உரிமை யாளரால் இந்த வேலிக்கு அருகாமையில் கால்வாய் ஒன்று நிர்மாணிக்கப்பட்டிருந்தது. இதன் காரணமாக வேலியின் பாதுகாப் பிற்காக மேலதிக வேலையாக பாதுகாப்புச் சுவர் ஒன்று நிர்மாணிக்கப்பட்டு வேலியின் நிர் மாண வேலைகள் பூரணப்படுத்த | நிர்மாண ஒப்பந்த வேலைகள் உரியவாறு திட்டமிட்டு மேற்கொள் ளப்பட வேண்டுமென்ப துடன் நிர்மாணத்தின் மூலம் எதிர்பார்க்கப்பட்ட நோக்கத்தினை நிறை வேற்றிக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| கப்பட்டிருந்த வேளியின் ஆங்காங்கே இடைவெளிகள் காணப்பட்டமையாலும் மீன் குளங்களிற்குத் தேவையான பாதுகாப்பு வழங்கப்படாதிருந்ததுடன் ரூபா 4,521,452 செலவிலிருந்து எதிர் பார்த்த நோக்கம் நிறைவேறியிருக் கவில்லை. | வேண்டிய நிலை ஏற்பட்டிருந்த மையை அறியத்தர விரும்பு கின்றேன். அதற்கமைய, குறித்த பொறியியலாளர் மதிப்பீட்டில் குறி ப்பிடப்பட்டிருந்தவாறு 550 மீற்றர் வரை வேளியினை நிர்மாணிப்ப தற்கு நிதி ஏற்பாடு போதுமானதாக இருக்கவில்லை. அதற்கமைய குறித்த நிதி ஏற்பாட்டு எல்லை யினைப் பயன்படுத்தி 345.45 மீற்றர் மாத்திரம் நிர்மாணிக்கப் பட்டது. மேலும், இக்காணிக்கு அருகாமையிலுள்ள காணியின் உரிமையாளரால் நிர்மாணிக்கப் பட்டிருந்த கால்வாய்க்கு மீன் குளங்களிலிருந்து அகற்றப்படும் நீரை எதிர்காலத்தில் பாய்ச்சுவதற் குத் தேவையான இடவசதியினைப் பெற்றுக் கொள்வதற்காகவே வேளியின் ஆங்காங்கே இடை வெளிகள் வைக்கப்பட்டுள்ளன. | |
| (ஆ) உடவலவ திலாபியா இனவிருத்தி நிலையத்தில் 04 குளங்களையும் 04 செங்கல் தாங்கிகளையும் நிர்மாணிப் பதற்காக ரூபா 17,066,264 தொகை செலவிடப்பட்டிருந்ததுடன், 2019 யூன் 18 ஆந் திகதி கணக்காய்வில் மேற்கொள்ளப்பட்ட பௌதீக பரிசோத னையில் அவ்வாறு நிர்மாணிக்கப் பட்டிருந்த 04 குளங்களில் 03 இலும் 04 தாங்கிகளில் 02 இலும் மீன்கள் காணப்படவில்லை. இதற்கமைய, குளங்கள் மீன்களின் இனவிருத்திக் காக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. | B12, B13, B14, B15 ஆகிய குளங்கள் மீன்கள் விரல் அளவுவரை வளர்க்கப்படுகின்ற குளங்களாகக் காணப்படுவதுடன் பரிசோதனைக்கு உட்பட்ட காலத் தில் மீன் குஞ்சுகளிற்கே கூடிய கேள்வி காணப்பட்டமையால் அதிகளிவில் குஞ்சுகளாகவே அவை விநியோகிக்கப்பட்டன. | நிர்மாணிக்கப்பட்ட குளங் களை உச்ச இயலளவில் பயன்படுத்திக் கொள்வத ற்கு முகாமைத்துவம் கவனம் செலுத்துதல் வேண்டும். |

### 3.2 செயற்பாட்டுச் செயற்திறனின்மை

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) இனங்காணப்படாத ரூபா 452,474 வைப்புக்கள் மற்றும் 02 ஆண்டுகளைத் தாண்டிய ரூபா 363,329 நிறுத்திவைத்தல் வரி என்பன தீர்க்கப்பட்டிருக்கவில்லை. | இதில் உள்ளடங்கியுள்ள "நிறுத் திவைத்தல் வரி" (WHT Tax) இன் பெறுமதி 2011 இற்கு உரிய தாகும். இத்தொகையினைத் தீர்ப்பதற்காக குறித்த வவுச்சர் களை பரிசோதிக்க வேண்டியிரு | வைப்புக்களை இனங்கண்டு தீர்ப்பதற்கு அல்லது கடப் பாடு இல்லையாயின் வருமா னத்திற்கு எடுப்பதற்கு நடவடி க்கை எடுக்க வேண்டுமென்ப துடன், நிறுத்திவைத்தல் வரியினை தீர்த்தலுக்கான சாத்தியம் |

| | | |
|---|---|---|
| | ப்பதனால், அது சிக்கலானாதாக காணப்படுகின்றது. இருப்பினும், இத்தொகையினைத் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | தொடர்பில் பரிசோ தித்து நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) உடவலவ கா.ஃ.ப் இனவிருத்தி நிலையத்தின் கோரிக்கையின்றி தலைமை அலுவலகத்தினால் வழங்கப்பட்டிருந்த நீர்க்குளாய் விடயங்களுடன் சம்பந்தப்பட்ட 4 உதிரிப் பாகங்கள், 5 மின்சார உதிரிப் பாகங்கள், 02 இயந்திர சாதன உதிரிப் பாகங்கள் 01 வலைத் தொகுதி என்பன 2019 யூன் 20 ஆந் திகதி மேற்கொள் ளப்பட்ட பௌதீக பரிசோதனையில் மிகையாகக் காணப்பட்டன. அத்து டன், மேலதிக இருப்பை வைத்தி ருந்தமையால் 5 ஹோர்மோன் வகைகள் 2003 ஆம் ஆண்டு முதல் 2017 ஆம் ஆண்டு வரை யான காலத்தில் காலாவதியாகியி ருந்தன. | 2016 யூலை 15 ஆந் திகதி நீர்க்குளாய் தொகுதி உதிரிப் பாகங்கள் கொள்வனவு செய்யப் பட்டுள்ளதுடன், நிதி ஏற்பாடு கிடைக்கும் வரை வைக்கப்பட் டுள்ளது. 1991 சனவரி 29 ஆந் திகதி அதாவது அதிகாரசபை ஆரம்பிக்கப்படுவதற்கு முன்னர் மின்சார உதிரிப்பாகங்களும் வலைத் தொகுதியும் கொள்வ னவு செய்யப்பட்டுள்ளன. தாய் மீன்கள் வளர்ச்சியடையாமை மற்றும் பெற்றுக் கொள்கின்ற ஹோமோன்களிற்கு பிரதிபலன் கிடைக்காமை காரணமாக மேல திக ஹோர்மோன்கள் எஞ்சியு ள்ளன. | தேவைக்கேற்ப பொருட்களை கொள்வனவு செய்து இருப்புக் கட்டுப்பாட்டு முறையொ ன்றை பின்பற்றுவதற்கு நடவ டிக்கை எடுத்தல் வேண்டும். |

## 3.3 விளைவற்ற மற்றும் குறைவாகப் பயன்படுத்திய ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) உடவலவ கா.ஃ.ப், புதிய கா.ஃ.ப் மற்றும் திலாபியா இனவிருத்தி நிலையத்தில் காணப்படுகின்ற 1000 $M^2$ விஸ்தீரண முடைய மீன் குளங்களில் 7 தாங்கிகள் உச்ச இயலளவில் பயன்படுத்தப்பட் டிருக்காமை 2019 யூன் மாதத்தில் மேற்கொண்ட பௌதீகப் பரிசோதனை யில் அவதானிக்கப்பட்டது. மேலும், மீன் உற்பத்திக்காக பயன்படுத்தப் பட்டிருந்த மீன்களின் எண்ணிக்கையுடன் ஒப்பிடுகையில் பெற்றுக் கொள்ளப்பட் டிருந்த விளைச்சல் 08 குளங்கள் தொடர்பில் 3.5 சதவீதம் முதல் 13 சதவீதம் வரையான மிகக் குறைவான மட்டத்தில் காணப்பட்டது. 2018 மே மாதத்தில் புதிய கா.ஃ.ப் இனவிருத்தி நிலையம் ஆரம்பிக்கப்பட்டிருந்த போதிலும், அதிலுள்ள 07 குளங்களை பாவனைக்கு எடுத்தலில் காணப்பட்ட காலதாமதம் 05 முதல் 11 மாதங்கள் | 2019 இற்கு ஒதுக்கப்பட்டிருந்த நிதி ஏற்பாட்டின் படி, உடவலவ புதிய கா.ஃ.ப் இனவிருத்தி நிலைய த்திலுள்ள 05 குளங்கள் புனர மைக்கப்பட்டு தற்போது உச்ச இயலளவில் பயன்படுத்தப்படு கின்றன என்பதைக் குறிப்பிட விரும்புகின்றேன். எஞ்சிய குளங் களைத் திருத்தியமைப்பதற்காக தற்போது "Tentative Estimate" தயாரிக்கப்பட்டுள்ளதுடன் தேவை யான நிதி ஏற்பாடு கிடைக்காமை யால் அந்தக் குளங்களை திருத்தியமைக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளமையை குறிப்பிட விரும்புகின்றேன். மேலும், அந்தக் குளங்களில் ஹைட்ரில்லா எனும் நீரியல் தாவரம் பெருகியுள்ள மையால் | மீன் தாங்கிகள் உச்ச இயலளவில் பயன்படுத் தப்பட்டுள்ளனவா எனக் கண்டறிந்து சொத்துக் களை உரிய விதத்தில் நிர்வகித்தல் முகாமை த்துவச் சபையின் பொறுப்பாக உள்ளது டன், அதற்குத் தேவை யான உரிய முகாமை த்துவத் திட்டங்களைத் தயாரித்து அமுல்படுத் துதல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| வரை காணப்பட்டதுடன் மேலும் 17 குளங்கள் திருத்தியமைக்கப்படாமை காரணமாக விளைவற்றுக் காணப்பட்டன. | அதனைக் கட்டுப்படுத்த வேண்டியுள்ளது. N1 குளத்தில் அதிக நீர்க்கசிவு காணப்பட்ட துடன் அதனைக் கட்டுப்படுத்த முடியாத அளவிற்கு பாசி மற்றும் ஹைட்ரில்லா பெருகியுள்ளது. ஆகையால், நீர் சுத்திகரிப்பினை (இயற்கை உணவு) மேற்கொள்ள முடியாத நிலை ஏற்பட்டு விளைச்சலும் குறைவடைந்துள் ளது. N4 குளத்தில் கெட்லா இன முட்டைகள் வைக்கப்பட்டுள்ள துடன் மீன்களிற்கு லேர்னீயம் என்ற நோய் பீடிக்கப்பட்டமை யால் மீன்கள் இறந்துள்ளன. | |
| (ஆ) உடவலவ புதிய நீரியல் வளர்ப்பு அபிவிருத்தி நிலயத்தில் நீர் வழங்கல் முறைமையினை வழங்கி பொருத்தும் வேலைகள் ரூபா 8,628,689 செலவிடப் பட்டு 2018 பெப்ரவரி 11 ஆந் திகதி பூரணப்படுத்தப்பட்டிருந்ததுடன், கணக்கா ய்வத் திகதியான 2019 யூன் 19 ஆந் திகதி வரையிலும் நீரிரைத்தலிற்காக மின்சாரம் பெற்றுக் கொள்ளப்பட்டிருக்க மையால் ரூபா 8,628,689 செலவில் நிர்மாணிக்கப்பட்டிருந்த செயற்திட்டத் திலிருந்து உச்ச பயன்பாட்டை பெற்றுக் கொள்ள முடியாதுள்ளது. | உடவலவ புதிய நீரியல் வளர்ப்பு அபிவிருத்தி நிலயத்தில் நீர் வழங்கல் முறைமையினை வழ ங்கி பொருத்தும் வேலைகளின் கீழ் நீர் இரைக்கும் நிலையத் திற்கு மின்சாரத்தை வழங்குவதற் காக அதிகாரசபையின் வளவில் மேற்கொள்ளப்பட வேண்டிய மின்கம்ப இணைப்புக்கள் மற்றும் பெனல் பொருத்துதல் போன்ற அனைத்து வேலைகளும் முடிவ டைந்துள்ளன என்பதைக் குறிப் பிட விரும்புகின்றேன். மேலும், தற்போது இலங்கை மின்சார சபையால் மின் இணைப்பினை வழங்கும் வேலைகள் மேற்கொள் ளப்பட்டு வருகின்றன. அந்த வேலைகளில் ஏறத்தாழ 95% பௌதீக செயன்முன்னேற்றம் காணப்படுவதை குறிப்பிட விரும்புகின்றேன். அதற்கமைய, வெகுசீக்கிரத்தில் நீர் இரைத்தல் நிலையத்தை உச்ச இயலளவில் பயன்படுத்தக்கூடிய நிலை ஏற்படும்.<br>அவ்வாறே, இலங்கை மின்சார சபையிடமிருந்து நிரந்தரமாக மின்சாரத்தைப் பெற்றுக்கொள் ளும் வரை தற்காலிக மின் வழங்கல் மூலம் நீரைப் பாய்ச்சுவதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள் ளமையை குறிப்பிட விரும்புகின் றேன். | நிர்மாண ஒப்பந்த வேலைகள் திட்டமிடப் பட்டு பூரணப்படுத்தப் படுதல் வேண்டுமென் பதுடன் இயலளவினை உச்ச அளவில் பயன் படுத்திக் கொள்வதற்கு முகாமைத்துவம் கவ னம் செலுத்துதல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| (இ) தலாபியா இனவிருத்தி நிலையத்தின் தொழிலாளர் இல்லத்தினை நிர்மாணிப் பதற்காக ரூபா 14,063,040 செலவில் 05 தொழிலாளர் விடுதிகளைக் கொண்ட தொழிலாளர் இல்லம் நிர்மாணிக்கப்பட்டிருந்ததுடன் 2019 யூன் 19 ஆந் திகதியளவில் அதில் 02 விடுதிகள் பயன்பாட்டிற்கு எடுக்கப்பட் டிருக்கவில்லை. | தலாபியா இனவிருத்தி நிலையத் தின் தொழிலாளர் இல்லத்தில் வசித்த ஒருவர் தற்போது மரணித்துள்ளதுடன், மற்றைய நபர் செவை இடமாற்றம் பெற்றுச் சென்றுள்ளார். அதன்காரணமாக இந்த விடுதிகள் வெற்றிடமாகக் காணப்படுவதுடன் எவரேனும் உத்தியோகத்தர் ஒருவர் கோரி க்கை விடுவிப்பின் அது வழங்கப்படவுள்ளது. | தொழிலாளர் விடுதி களை உச்ச அளவில் பயன்படுத்திக் கொள் தல் வேண்டும். இது தொடர்பில் முகாமைத் துவம் கவனம் செலுத் துதல் வேண்டும். |

### 3.4 செயற்திட்டங்கள் அல்லது மூலதன வேலைகள் தாமதமடைதல்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மன்னார் மாவட்டத்தின் விடத்தல்தீவில் அமைந்துள்ள வனச்சீவராசிகள் சரணாலயத் திற்கு உட்பட்ட காணியில் கரையோர மற்றும் கடல்சார் நீரியல் வளர்ப்பு உற்பத்திகளை அதிகரிக்கும் நோக்குடன் 2016 ஆகஸ்ட் முதல் 2018 ஆகஸ்ட் வரையான காலத்தில் நிர்மாண வேலைகளை மேற்கொள்வதற்கு திட்டமிடப்பட்டு, மீளாய்வாண்டு வரையிலும் சுற்றாடல் தாக்கமதிப்பீட்டு அறிக்கை, சாத்தியக்கூற்று அறிக்கை மற்றும் இடர் மதிப்பீட்டு அறிக்கை பெற்றுக் கொள்ளப் படாதிருந்ததுடன், செயற்திட்டத்திற்கான நீர் மற்றும் மின்சாரத்தை பெற்றுக் கொள்வதற் காக ரூபா 25,185,181 தொகை செலவிடப்பட் டிருந்தது. | இக்காணியின் உரித்தினை பெற் றுக் கொள்வதற்காக வனச்சீவராசி கள் திணைக்களத்துடன் மீன்பிடி மற்றும் நீரியல் வளங்கள் அமைச்சு தொடர்ச்சியாக பேச்சு வார்த்தை நடாத்தியதுடன், இது தொடர்பில் 2020 மே 14 ஆந் திகதி அரலியகஹ மாளிகையில் இடம்பெற்ற கலந்துரையாடலில் இப்பிரச்சினையை துரிதமாக தீர்க் குமாறு ஆலோசனை வழங்கப்பட் டது. | செயற்திட்டத்தை ஆரம் பிப்பதற்கு முன்னர் சுற் றாடல் தாக்கமதிப்பீ ட்டு அறிக்கை, சாத்திய க்கூற்று அறிக்கை மற் றும் இடர் மதிப்பீட்டு அறிக்கைகளைப் பெற் றுக்கொளவதற்கு நடவ டிக்கை எடுக்க வேண்டு மென்பதுடன் இது தொடர்பில் முகாமைத் துவம் கவனம் செலுத் துதல் வேண்டும். |

### 3.5 ஒப்பந்த நிர்வாகக் குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) இரணைமடு இனவிருத்தி நிலையத்திற்கு முறையான நீர் வசதியினைப் பெற்றுக் கொள்வதற்குத் தேவையான அத்தியாவசிய மேம்பாடுகளை மேற்கொள்வதற்காக தனியார் கம்பனியொன்றுக்கு 2018 யூலை 25 ஆந் திகதி ரூபா 16,600,780 ஒப்பந்த தொகைக்கு செயற்திட்டம் கையளிக்கப்பட் டிருந்தது. 2018 யூலை 25 இலிருந்து 03 | இரணைமடு இனவிருத்தி நிலையத்திற்கு முறையான நீர் வசதியினைப் பெற்றுக் கொள்வதற்குத் தேவையான அத்தியாவசிய மேம்பாடு களை மேற்கொள்ளும் செயற்திட்டத்திற்கான திட் டத்தின் கட்டமைப்பை நீர்ப் | உடன்படிக்கை பிரகா ரம் ஒப்பந்த வேலை களை பூரணப்படுத் துவதற்கு அவை திட்ட மிட்டு நிர்மாணிக்கப் படுதல் வேண்டும். இது தொடர்பில் முகா மைத்துவம் கவனம் |

| | | |
|---|---|---|
| மாதத்தினுள் வேலைகள் பூரணப்படுத்தப்பட வேண்டியிருந்த ஒப்பந்தம் ஓராண்டுக்கு மேல் கடந்திருந்த போதிலும், வேலைகள் பூரணப்படுத்தப்பட்டிருக்கவில்லை. மேற்படி நிர்மாணம் தொடர்பில் நீர்ப்பாசனத் திணைக்களத்தின் NP/27/03/02/257 ஆம் இலக்க 2018 ஒக்தோபர் 23 ஆந் திகதி கடிதத்தின் படி, இணங்கப்பட்டிருந்த நிபந்தனைகளை மீறி குடம் முறைமைகளை பொருத்துதல் மற்றும் சுயாதீன கால்வாய் அகழ்வு என்பன மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன், இதன் காரணமாக 2018 ஒக்தோபர் 23 ஆந் திகதி முதல் தற்காலிகமாக வேலைகள் இடைநிறுத்தப்பட்டிருந்தன. அத்துடன் நீர்ப்பாசனத் திணைக்களத்தின் அங்கீகாரமின்றி சைபனை நிர்மாணிக்கையில் நீர் வழங்கல் விரிவாக்கப்பட்டிருந்தது. மேலும், ஒப்பந்தத்தின் கீழ் விலகல் கட்டளைகளின் மூலம் செலவிடப்பட்டிருந்த ரூபா 368,081 தொகை குறித்த வேலை இடைநிறுத்தப்பட்டிருந்தமையால் பயனற்ற செலவினமாகியிருந்தது. | பாசனத் திணைக்களத்தின் அறிவுறுத்தலின் படி மீள திருத்தியமைக்க வேண்டிய நிலை ஏற்பட்டிருந்தது. இந்த இரணைமடு நீர்த்தேக்கம், குளக்கட்டு மற்றும் அதனைச் சூழவுள்ள நிலப்பிரதேசம் நீர்ப்பாசனத் திணைக்களத்திற்கு உரித்தாக காணப்படுவதனால், திட்டத்தில் மேற்கொள்ளப்படுகின்ற திருத்தங்கள் எப்போதும் அதன் தேவைப்பாடுகளை நிறைவேற்றும் விதத்திலேயே இடம்பெறுதல் வேண்டும். அத்துடன், இச்செயற்திட்டத்தின் நீர்த்தேக்கத்தினுள் மேற்கொள்ளப்படும் நிர்மாணங்கள் குறித்த மட்டம் வரை நீர் குறைந்த பின்னர் வறண்ட காலங்களிலேயே மேற்கொள்ளப்பட வேண்டிய நிலை ஏற்பட்டிருந்தது. | செலுத்துதல் வேண்டும். |
| (ஆ) ரெக்கவ நண்டு வளர்ப்புச் செயற்திட்டம் 2018 யூன் 11 ஆந் திகதி ஆரம்பிக்கப்பட்டு குளங்களை அமைத்தல் மற்றும் கழிவுநீர் வடிகால் முறைமை மற்றும் தாங்கிகளை நிர்மாணிப்பதற்காக ரூபா 188,665,560 செலவிடப்பட்டு வேலைகள் பூரணப்படுத்தப்பட்டிருந்த போதிலும், நிதிப்பிரமாணம் 3 (ஆ), III இன் பிரகாரம் ஆரம்பக் கிரயம் ரூபா 10 மில்லியனுக்கு மேற்பட்ட செயற்திட்டங்களிற்குத் தேவையான பூர்வாங்க அங்கீகாரம் அதாவது குறித்த அமைச்சினால் சமர்ப்பிக்கப்பட்டிருந்த கொள்கைக்கு அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டிருகக்வில்லை. மேலும், மேற்படி செயற்திட்டம் அமுல்படுத்தப்படுகின்ற ரெக்கவ பிரதேச செயலகப் பிரிவிலுள்ள 42 ஏக்கர் காணிகளை உரித்தாகக் கொண்டுள்ள தனிப்பட்டோரிற்கும் அதிகாரசபைக்கும் இடையே செயற்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு தமது காணிகளை வழங்குதல் தொடர்பில் உடன்படிக்கைகளில் கைச்சாத்திடப்பட்டிருக்கவில்லை. கணக்காய்வுத் திகதி வரையிலும் நண்டு வளர்ப்புக்குத் தேவையான உவர்ப்புத் தன்மை காணப்படாமையால் செயற்திட்டம் இடைநடுவே கைவிடப்பட்டிருந்தது. | முகாமைத்துவத்தினால் கருத்துத் தெரிவிக்கப்பட்டிருக்கவில்லை. | இவ்வாறான பாரிய கிரயத்தினைக் கொண்ட செயற்திட்டங்களை ஆரம்பிப்பதற்கு முன்னர், அதற்காக சரியான திட்டங்கள் தயாரிக்கப்பட்டு சாத்தியக் கூற்று அறிக்கை, சுற்றாடல் மதிப்பீட்டு அறிக்கை மற்றும் இடர் மதிப்பீட்டு அறிக்கை என்பன பெறப்பட்டிருத்தல் வேண்டுமென்பதுடன், செயற்திட்டத்தை இடைநடுவே கைவிட்டிருத்தல் சம்பந்தமாக பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தர்களிடம் விசாரணை மேற்கொண்டு மாற்றுவழிகள் தொடர்பில் ஆய்வினை மேற்கொள்வதற்கும் வளங்களை வினைத்திறனாகப் பயன்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| (இ) தனியார் மற்றும் அரசாங்க பங்குடமைச் செயற்திட்டமாக அமுல்படுத்துவதற்கு உத்தேசித்துள்ள கல்முல்ல கிரேப்சிடி செயற்திட்டத்திற்காக அம்பலந்தோட்டை பிரதேச செயலகப் பிரிவிலுள்ள 89 ஹெக்டயர் விஸ்தீரணமுடைய காணி அம்பலந்தோட்டை பிரதேச செயலாளரி னால் மீன்பிடி மற்றும் நீரியல் வளங்கள் அமைச்சின் ஊடாக அதிகாரசபைக்கு வழங்கப்பட்டிருந்தது. இருப்பினும், 1998 இன் 53 ஆம் இலக்க இலங்கை தேசிய நீர் சீவராசிகள் வளர்ப்பு அபிவிருத்தி அதிகாரசபை சட்டத்தின் 30 (3) ஆம் பிரிவின் பிரகாரம் அரசாங்கத்தின் எந்தவொரு அசைவற்ற ஆதனத்தையும் அரசாங்கக் காணிகள் விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சரின் இணக்கப்பாடி ன்றி கையேற்க முடியாததுடன் கையளித் தல் மேற்கொள்வதாயின் 33 (1) ஆம் பிரிவின் படி உத்தேச கையேற்பு வர்த்தமானியில் வெளியிடப்பட்டு காணி களை கையேற்கும் சட்டத்தின் கீழ் கையேற்கப்பட்டு முறையாக குறித்த செயற்திட்டத்திற்கு ஒப்படைக்கப்பட வேண்டிய போதிலும், அதிகாரசபைக்காக ஒதுக்கப்பட்டுள்ள 89 ஹெக்டயார் விஸ்தீரணமுடைய காணி வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டிருக்கவில்லை. மேற்படி செயற்திட்டத்திற்காக 2018 ஆம் ஆண்டில் ரூபா 5 மில்லியன் நிதி ஒதுக்கப்பட்டிருந் ததுடன், பூர்வாங்க சுற்றாடல் மதிப்பீட்டு அறிக்கை மற்றும் ஏனைய சிறு செலவுகளிற்காக ரூபா 490,930 செலவிடப் பட்டிருந்தது. 2018 நவம்பர் 03 ஆந் திகதி, ரூபா 80 மில்லியன் பெறுமதிக்கு ஒப்பந்தம் கையளிக்கப்பட்டிருந்ததுடன், போதியளவு பாதீட்டு நிதி ஏற்பாடு இன்மையால் அம்பாந்தோட்டை கல்முல்ல செயற்திட்டம் கைவிடப்பட்டிருந்தது. | முகாமைத்துவத்தினால் கருத்துத் தெரிவிக்கப்பட்டிரு க்கவில்லை. | கல்முல்ல கிரேப்சிடி செயற்திட்டத்தை ஆரம் பிப்பதற்கு முன்னர் பாதீட்டு நிதி ஏற்பாடு காணப்படுகின்றதா என் பதை பரிசோதிப்பதற்கு முகாமைத்துவம் கவ னம் செலுத்தியிருத்தல் வேண்டும். |
| (ஈ) திலாபியாவிற்காக மீன் உணவக பிரிவொ ன்றை உடவலவ கா.ஃ.ப் இனவிருத்தி நிலையத்தில் தாபிப்பதற்கு செயற்திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டு தரமுள்ள உணவுகளை குறைந்த உற்பத்திக் கிரயத்தில் அதிகாரசபையினால் உற்பத்தி செய்வதன் மூலம் ஆண்டொன்றிற்கு மீன் உணவுகளிற்காக அதிகாரசபையால் செலவி டப்படுகின்ற தொகையில் ஏறத்தாழ ரூபா 5 மில்லியனை சேமிப்பதற்கு திட்டமிடப்பட்டி ருந்தது. கொள்வனவு வழிகாட்டல்கள் கையேட்டின் 2.3.1 ஆம் | முகாமைத்துவத்தினால் கருத்துத் தெரிவிக்கப்பட்டிரு க்கவில்லை. | செயற்திட்டத்தை ஆரம் பிப்பதற்கு முன்னர் அதனை திறம்பட திட்டமிடுதல் முகாமை த்துவத்தின் பொறுப் பாகும். விளைவற்ற சொத்துக்கள் தொடர் பில் விசாரித்தறிந்து அச்சொத்துக்களை வினைத்திறனாகப் பய ன்படுத்திக் கொள்வத |

| | | |
|---|---|---|
| வழிகாட்டலின் படி, கொள்வனவுச் சபையொன்றை நியமிக் குமாறு கோருவதற்கு முன்னரான பூர்வாங்க சுற்றடால் பரிசோதனை, சுற்றாடல் தாக்க மதிப்பீடு, சமூகத் தாக்க மதிப்பீடு மற்றும் செயற்திட்டத்துடன் தொடர்புடைய ஏனைய பூர்வாங்க செயற்பாடுகள் மேற்கொள்ளப் படாது ரூபா 10,225,796 தொகை 2019 ஆம் ஆண்டில் மீன் உணவு உற்பத்தி இயந்திரத்தைக் கொள்வனவு செய்வதற்காக செலவிடப்பட்டிருந்தது. இயந்திரத்தைப் பொருத்துவதற்குத் தேவையான கட்டிடம் நிர்மாணிக்கப்பட்டிருக்காமை, மின்சாரம் பெறப்பட்டிருக்காமை, உட்கட்டமைப்பு வசதிகள் என்பன இல்லாமை காரணமாக 2019 ஆகஸ்ட் முதல் 2020 ஆகஸ்ட் வரையிலும் இயந்திரத்தை இயக்குவதற்கு முடிந்திருக்கவில்லை. இதன் காரணமாக மீன் உணவுகளிற்காக மீளாய்வாண்டில் ரூபா 57,791,585 தொகையினை செலவிட நேர்ந்திருந்தது. மேலும், இயந்திரத்தின் உத்தரவாதக் காலத்தினுள் இயந்திரம் செயலிழந்து காணப்பட்டதுடன், ரூபா 10,225,796 செலவிடப்பட்டிருந்த செயற்திட் டத்தின் நோக்கம் அடையப்பட்டிருக்க வில்லை. | | ற்கு வேலைத்திட்ட மொன்றை தயாரித்தல் வேண்டும். |

## 4. கணக்களிப் பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 உள்ளகக் கணக்காய்வ

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| களப்புகள் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் ரூபா 161,400,000 பெறுமதியான களைத் தாவரங்கள் மற்றும் 03 கழிவகற்றல் இயந்திரங்களைக் கொள்வ னவு செய்வதற்காக முற்பணமாக ரூபா 42,572,925 தொகை 2018 யூலை 13 ஆந் திகதி போலியான பிணைப்பத்திரங்களை வழங்கியிருந்த வழங்குனருக்கு குறித்த ஆவணங்களின் நம்பகத் தன்மையினை உறுதிப்படுத்தாது செலுத்தப்பட்டிருந்த போதிலும், குறித்த உத்தியோகத்தர்களிற்கு எதிராக தாபனவிதிக் கோவையின் II ஆம் தொகுதியின் XLUIII ஆம் அத்தியாயத் தின் படி எவ்வித ஒழுக்காற்று நடவடிக் | முகாமைத்துவத்தினால் கருத்துத் தெரிவிக்கப்பட் டிருக்கவில்லை. | போலியான பிணைப்பத் திரங்களை தயாரித்திருந்த உத்தியோகத்தர்களிற்கும் வழங்குனருக்கும் எதிராக தாபன விதிக்கோவையி லுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

கையும் இதுவரை எடுக்கப்பட்டிருக்க வில்லை. இவ்வாறு ஒழுங்கீனமாக செலுத்தப்பட்டிருந்த ரூபா 42,572,925 தொகை 06 மாதங்கள் தனிப்பட்டோரின் பயன்பாட்டிற்காக வழங்கப்பட்டு பின்னர் மீளப் பெறப்பட்டிருந்தது. மேலும், 04 உத்தியோகத்தர்கள் இந்த இயந்திரங் களைப் பரிசோதிப்பதற்காக வெளிநாடு சென்று வந்திருந்ததுடன் அதற்காக ரூபா 363,504 தொகை அதிகாரசபையால் செலுத்தப்பட்டிருந்ததுடன் அத்தொகை பயனற்ற செலவினமாகியிருந்தது.